NALLUR BRANCH
MUNICIPAL COUNCIL
JAFFNA

A/L 88
பிரிவு III
[illegible]
New Master
Institute
[illegible] JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

A/L 88
பிரிவு II
Physics - திரு. [illegible]
Chemistry - திரு. [illegible]
Zoology - திரு. [illegible]
Botany - திரு. [illegible]
Pure & Applied Math - திரு. [illegible]
New Master
Institute
B.M. [illegible] JAFFNA.

சுடர்: 1 யாழ்ப்பாணம் [illegible] வைகாசி மீ 26 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி-1406 றம்ழான் பிறை 30 (09-06 1986) UTHAYAN - A RIVERY TAMIL DAILY கதிர்: 173

## இனப்பிரச்சினை:

# இடதுசாரிகளின் உதவியை நாடுகிறார் ஜனாதிபதி ஜே. ஆர்.!

## தமிழகம் சென்று போராளிகளை சந்தித்து யுத்த நிறுத்தத்துக்கு இணங்கச் செய்யட்டாம்!!

லண்டன், ஜூன். 8

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்த நாட்டு இடது சாரிகளின் உதவியை நாடியிருக்கிறார் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன.

பிரஸ்தாப கட்சிகள் தமிழ் நாடு சென்று, தமிழ்ப் போராளிகள் அமைப்புத் தலைவர்களைச் சந்தித்துப் பேசி, மூன்று மாத யுத்த நிறுத்தத்துக்கு இணங்கச் செய்ய முயற்சி எடுக்கலாம்.

அவ்வாறு செய்தால், பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வைக் காணலாம்.

இவ்வாறு ஜனாதிபதி திரு ஜெயவர்த்தன பி. பி. சி. க்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

தமிழர் அமைப்புக்களும் மார்க்ஸிய சித்தாந்த அடிப்படையில் செயல்படுபவர்கள். தென் இலங்கை இடதுசாரிகளும் மார்க்ஸிய சிந்தனையுடன் செயல்படுபவர்கள்.

ஆகவே தென் இலங்கை இடதுசாரி அரசியல் கட்சித் தலைவர்கள் தமிழர் அமைப்புக்களைச் சந்தித்து பேசினால் அவர்கள் யுத்த நிறுத்தத்துக்கு இணங்கக் கூடும்.

மூன்று மாத யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இடதுசாரி அரசியல் கட்சிகள் தமிழர் அமைப்புக்களை இணங்கச் செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்தால் நாம் பேச்சுவார்த்தை மூலம் ஒரு அரசியல் தீர்வைக் காணக்கூடியதாக இருக்கும்.

சிங்கள, தமிழ் மக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைத்தொடர்பு 3ஆவது நாளாகத் துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு இடையேயான சகல தொலைபேசித் தொடர்புகளும் மூன்றாவது நாளாக நேற்றும் துண்டிக்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி தொலைத் தொடர்பு நிலையத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே சேவை துண்டிக்கப்படுவதற்குக் காரணம் என்று தொலைத் தொடர்பு உயர் அதிகாரி ஒருவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்போதைய பதற்ற சூழ்நிலையில் தொலைத் தொடர்பு ஊழியர்கள் கிளிநொச்சி செல்ல முடியாதுள்ளனர்.

போக்குவரத்து வசதிகள் சீரடைந்து ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டால் தொலைத் தொடர்பு ஊழியர்கள் இன்று (திங்கள்) கிளிநொச்சி செல்வர் என்றும் —

அப்படிச் சென்றால் இன்று மாலை முதல் தொலைத் தொடர்பு சேவை வழமைக்குத் திரும்பும் என்றும் திணைக்கள அதிகாரி சொன்னார்.

(உ - எ - 6)



மூண்டு மாதங்களை சுகமாய்க் கடத்திக் கொண்டு, பிறகுதான் நினைச்சதைச் செய்யிறதுக்கு இது ஒரு புது வழியோ!

இந்தியாவோடை சுளைச் சாச்சு இனி, இடதுசாரியளைப் பாப்போம் எண்ட நினைப்போ, இல்லாட்டால்;

### படுகொலையை தடுக்குமாறு தந்தி

சென்னை, ஜூன் 8

இலங்கைத் தமிழர்கள் படுகொலைகள் செய்யப்படுவதையும் மிருகத்தனமாகத் தாக்கப்படுவதையும் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு ஜனதா கட்சி இந்தியப் பிரதமரைத் தந்தி மூலம் கோரியுள்ளது.

தமிழ்நாடு ஜனதாக் கட்சி தலைவர் இரா. செழியன் அனுப்பியுள்ள இந்தத் தந்தியில், இலங்கையில் இராணுவ அட்டகாசம் அதிகரித்து வருவதும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது (உ. ஒ)

# ஷெல் விழுந்து ஒரு தாய் வயிற்று பிள்ளைகள் ஐவர் பலி!

## அம்மா கண் முன்னே குழந்தைகளின் சடலங்கள் சதைத் துண்டுகளாகச் சிதறின

யாழ்ப்பாணம், ஜூன்.9

வீட்டின் மீது ஷெல் குண்டு விழுந்து, ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் ஐவர் இறந்த கொடுமை நடந்துள்ளது.

அன்னையைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அந்த உடன்பிறப்புக்களின் சடலங்கள், தாய் கண்முன்னே சதைகளாகச் சிதறிய பரிதாப சம்பவம் கடந்த புதன்கிழமை நடந்தது.

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் வசித்த ஒரு குடும்பத்துக்கே இந்தப் பேரிடி விழுந்தது. ஐந்து பிள்ளைகளை ஒரு நிமிட நேரத்தில் பறி கொடுத்த அந்த இளம் தாய் ஷெல் குண்டுபட்ட காயங்களுடன், நான்கு நாட்களின் பின்னர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

30 வயதான பெரியதம்பி கனகம்மா எனப்படும் அந்தத் தாய் பிரமை பிடித்தவர் போலக் காணப்படுகிறார். கண்ணீர் வடியும் முகத்துடன், வேதனையுடன் தமக்கு நிகழ்ந்த பரிதாபத்தை உதயன் செய்தியாளருக்கு விவரித்தார்.

கடந்த புதன்கிழமை காயமடைந்த இப்பெண் மணி நேற்றைய ஊரடங்குச்சட்டத்தின் மத்தியிலும் பொது மக்களின் உதவியுடன் வேறு வாகனம் ஒன்றில் காட்டுப் பாதையூடாக கேர தீவு வரை கொண்டு வரப்பட்டு அங்கிருந்து வான் ஒன்றில் நேற்று மாலை சுமார் 5 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கண்ணீரும் கம்பலையுமாக நேற்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட பெரியதம்பி கனகம்மா (வயது 30). உதயன் செய்தியாளரிடம் சொன்னதாவது:-

எனது கணவர் பருத்தித்துறையில் ஒரு பேக்கரியில் தொழில் புரிகின்றார்.

ஐந்துகுழந்தைகளுடன் நான் கிளிநொச்சியில்பஸ் டிப்போவிற்கு அருகில் உள்ள ஆனந்தபுரம் பகுதியில் வசித்து வந்தேன்

ஐந்து பிள்ளைகளின் பெயர் விவரம் பின்வருமாறு எனக்கேட்டறியப் பட்டது.

கலாநாதன் (10வயது) செந்தில்குமார் (8வயது) புஷ்பநாதன் (5வயது) பவானி (4வயது), கிருபாணி (1வயது).

கடந்த புதன்கிழமை அதிகாலை 5-30மணியளவில் கிளிநொச்சிப் பகுதியில் குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

கட்டிப்பிடித்தபடி நித்திரையில் இருந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவிலிருந்து திருமலைக்கு வானில் சென்ற 25 பேர் எங்கே?

யாழ்ப்பாணம், ஜூன் 9

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு வான் ஒன்றில் சென்ற 25க்கு அதிகமான தமிழ்ப்பயணிகள் பற்றிய நிலை இதுவரை தெரியவில்லை

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

வெள்ளிக்கிழமை காலை வவுனியாவில் இருந்து வான் ஒன்றில் புறப்பட்ட பயணிகள் திருகோணமலை சென்றடைந்ததாக இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.

பயணிகள் பிரயாணம் செய்த வான் கந்தளாயிற்கு அருகில் எரிந்த நிலையில் காணப்பட்டதாகவும், எண்மரின் சடலங்கள் கருகிய நிலையில் வானில் இருந்ததாகவும் அறியப்படுகின்றது

கருகிய சடலங்களில் பச்சிளம் குழந்தை ஒன்றினதும் இளம்பெண் ஒன்றினதும் சடலங்களும் அடங்கும் மூன்று சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. வானில் சென்றவர்களில் மிகுதிப் பேரின் நிலைபற்றி இதுவரை எந்தவித தகவலும் இல்லை.

இவர்களில் அநேகர் வடபகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

வான் பெரும்பான்மை இனத்தவருக்குச் சொந்தமானது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பயணிகளின் உறவினர்கள்.அவர்களைப் பற்றி ஆயுதப்படை முகாம்களில் விசாரணை செய்து வருகின்றனர்

இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்று முகாம் உயர் அதிகாரிகள் கைவிரிக்கின்றார்கள்.

(உ-இ-6)

### சுபநேரம்

9 — 6 — 1986

திங்கட்கிழமை

சுபநேரம்:
11 52 முதல் 1 22 வரை
ராகுகாலம்:
7.22 முதல் 8 52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

| நோன்பு | [illegible] |
|---|---|
| சஹார் | 4 19 |
| மக்ரிப் | 6.26 |

## யாழ். கோட்டைக்கு மேலும் பல சிப்பாய்கள்

### நேற்று பலாலியிலிருந்து வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன்9

யாழ் கோட்டை இராணுவ முகாமிற்கு மேலும் பல சிப்பாய்கள் நேற்று பலாலியில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது.

இவர்கள் பலாலியில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் மண்டைதீவு மினி இராணுவ முகாமில் இறக்கப்பட்டு பின்னர் கோட்டைக்கு சென்றதாகவும் தெரியவருகிறது.

நேற்றுக் காலை முதல் மாலைவரை சிப்பாய்களை ஏற்றி இறக்கும் வேலையில் ஹெலிக்கொப்டர், விமானம் ஈடுபட்டிருந்ததையும் காணக் கூடியதாய் இருந்தது.

இதே வேளை மண்டைதீவு மினி முகாமிற்கு அருகில் உள்ள பற்றைகள், மரங்கள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டன.

மண்டைதீவில் இருந்து பண்ணை வீதியூடாக கோட்டைவரும் சிப்பாய்கள் வீதியில் இருபக்கங்களையும் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்த பின்னரே தமது நடைபவனியைத் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

## பருத்தித்துறை: நேற்று பீரங்கி, ஷெல் தாக்குதல்

பருத்தித்துறை ஜூன் 9

நேற்றுக்காலை 11 மணியளவில் பருத்தித்துறை கடற்கரையோரமாக வந்தகடற்படைரோந்து கப்பலிலிருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனையடுத்து இராணுவ பொலீஸ் கூட்டு முகாம் பகுதியிலிருந்தும் தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதனால் பருத்தித்துறை நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிற்கு உணவுப் பொருள்கள் கடற்படைக் கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டது என்றும் —

அந்தக் கப்பல்களைப் போராளிகள் தாக்க முற்பட்ட போது கடற்படையினர் தொடர்ச்சியாகப் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

நேற்றுக்காலை 11 மணியிலிருந்து பிற்பகல் 2 15 வரை இப்பகுதியில் ஒரே குண்டு வெடிப்புச் சத்தமாகக் கேட்டது.

இத் தாக்குதலினால் முகாம் அருகிலிருந்த சில வீடுகள் சேதமுற்றன. ஒரு சிறுமிக்கு சிறு காயம் ஏற்பட்டது வேறு சேதங்கள் ஏற்பட்டதாக இச் செய்தி எழுதப்படும்வரை தகவல் கிடைக்கவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு தாக்குதல் ஈரோஸ் அறிக்கை

சென்னை, ஜூன் 8

வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையம்,வியாங்கொட ரயில், கட்டுநாயக்கா எயர்லங்கா விமானக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் எம்மால் மேற்கொள்ளப்படவில்லை சக விடுதலை இயக்கம் ஒன்றினால் தான் மேற்கொள்ளப்பட்டமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இப்படி ஈழப்புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) பொது ஆணைக் குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

அண்மையில் கொழும்பில் அடுத்தடுத்து நடந்த இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் ஈரோஸ் மேற்கொண்டதாக ராய்ட்டர் செய்தியை ஆதாரம் காட்டி ஸ்ரீலங்கா அரசு தொடர்பு சாதனங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன.

அது குறித்தே மேற்கண்ட அறிக்கையை ஈரோஸ் வெளியிட்டுள்ளது.

மேற்படி மூன்று தாக்குதல்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டன என்று உதயனுக்குத் தெரியவருகிறது

(உ-எ)

## செயலக ஊழியர் வெளிநடப்பு தொடரும்?

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ் செயலக ஊழியர் தொடர்ந்து வெளிநடப்புச் செய்வாரா?

இது பற்றி இன்று (திங்கள்) காலை யாழ் செயலகத்தில் நடைபெறும் தொழிற்சங்கங்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் செயலக சாரதி அருள்நாதன் கிளிநொச்சியில் வைத்து ஷெல் தாக்குதலில் மரணமானதைத் தொடர்ந்து, செயலக ஊழியர் கடந்த வெள்ளிக்கிழமை வெளிநடப்புச் செய்தனர்.

இந்த வெளிநடப்பைத் தொடருவதா என்பது பற்றி இன்று நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதி பெரும்பாலும் தொடர்ந்து வெளிநடப்பு செய்யும் திட்டம் கைவிடப்படலாம் என்று எதிர்பார்க்கின்றது.

வெளிநடப்பைத் தொடர்ந்து செய்வதற்குப் பதிலாக, யாழ் அரசு அதிபருக்கு இது சம்பந்தமாக மகஜர் ஒன்றைச் சமர்ப்பிப்பது பற்றியும் தொழிற் சங்க வட்டாரங்கள் ஆலோசித்துவருகின்றன.

ஷெல் தாக்குதல்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவில் 15 தமிழ் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம் ஜூன் 9

சிங்கப்பூர் செல்வதற்காக வடபகுதியிலிருந்து சென்ற பதினைந்து தமிழ் இளைஞர்கள் நேற்று கட்டுநாயக்கா விமானத்தில் வைத்து விமான நிலைய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை சுமார் 7. 30 மணியளவில் விமானநிலையத்தில் சுங்க பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தவேளையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களது பாஸ்போட்டுகள் தடுத்து வைக்கப்பட்டன

கைது செய்யப்பட்ட அனைவரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அனேகமானோர் யாழ்ப்பாணம், வவுனியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் நேற்று விமான நிலையத்தில் பயணிகள் அனைவரும் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

(உ-6)

## கிளிநொச்சி முகாமிற்கான மின் விநியோகம் துண்டிப்பு

கிளிநொச்சியில் நேற்று ஐந்தாவது நாளாகப் போராளிகள் சிப்பாய்களுடன் நேரடியாக மோதிக் கொண்டனர்.

கிளிநொச்சி இராணுவ பொலீஸ் கூட்டுமுகாமிற்கு மின்சார விநியோகமும் நேற்றுத் துண்டிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் இரவு தொடங்கிய மோதல் நள்ளிரவு வரை நீடித்ததாகவும் இதனை அடுத்தே கிளிநொச்சியில் நேற்று ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதியில் காயமடைந்த பலரை உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவர முடியாத நிலையும் ஏற்பட்டது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளை சிப்பாய்கள் முகாம்களை விட்டு வெளியே வந்ததாகவும்—

போராளிகள் நவீனரக ஆயுதங்கள் கொண்டு அவர்களைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளியே வந்த சிப்பாய்கள் 'ஷெல்' தாக்குதல் மேற்கொண்டதாகவும்—

வேறுசில பொது மக்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து கிளிநொச்சி இராணுவ — பொலீஸ் கூட்டு முகாம்களுக்குச் செல்லும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்றும் ஹெலிக்கொப்டரிலிருந்து கிளிநொச்சிப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று நடைபெற்ற நேரடிச் சமரின்போது காயமடைந்தவர்கள் பற்றியோ மரணமடைந்தவர்கள் பற்றியோ விபரம் ஏதும் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குடாநாட்டில் 5 மாத உணவு கையிருப்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ் குடாநாட்டுக்கு ஐந்து மாதங்களுக்குத் தேவையான அரிசி, சீனி, மா கையிருப்பில் உள்ளன

இப்படி உணவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிபொருள் தட்டுப்பாடுதான் தற்சமயம் இருக்கின்றது.

டீசல் கையிருப்பு பெருமளவு குறைந்ததால் நேற்று முன்தினம் இ. போ. ச. பஸ் சேவைகள் பெரும் அளவு பாதிக்கப்பட்டன.

நடைபாதையில் ஒரு போத்தல் பெற்றோல் 40 ரூபாவரை விற்கப்பட்டது.

கிளிநொச்சியில் நடைபெறும் சம்பவங்களால் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டதே பெற்றோல் விலை அதிகரிக்கக் காரணம் ஆகும். (இ-எ)

## அராலிப் பாலம் சிரமதானம் மூலம் அமைக்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஜூன் 9
தீவுப்பகுதி மக்கள் தற்போது பயன்படுத்தி வரும் அராலித்துறையின் ஊடான கடல் பாதைக்கு பாலம் அமைப்பதானால் அதனை சிரமதானம் மூலம் அமைக்க நடவடிக்கை எடுங்கள்.

சுருவில் கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ் அரசாங்க அதிபரை மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

தீவுப்பகுதி மக்கள் அனைவரும் முழுமையான பங்களிப்பை செலுத்தும் வண்ணம் இச்சிரமதான முயற்சி அமையுமானால் பாலம் அமைப்பு வேலைகள் துரிதமாக நிறைவேறும் என கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பந்தங்கள் மூலம் இப்பாலம் அமைக்கப்பட்டால் குறைந்தளவு வேலையே நடைபெறும் எனவும் ஊழல்கள் இடம் பெறும் எனவும் கால தாமதங்களும் வீண் சிரமங்களும் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுருவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள இக்கோரிக்கையின் பிரதி வேலணை உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (இ - 16)

## வீரபத்திரர் ஆலயமுகப்பு மண்டபம்

மண்டைதீவு, ஜூன் 9
மண்டைதீவு வீரபத்திரர் ஆலய முகப்பு மண்டபம் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இம் மண்டப அமைப்புக்கு இப்பகுதியைச் சேர்ந்த சமூக சேவையாளர் திரு. இ. தர்மலிங்கம் உதவி அளித்துள்ளார். (இ-143)

## இலங்கை அரசு தமிழ்நாட்டுடன் உறவை வளர்க்க வேண்டும்
### புல்ஜின்ஸ் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 9
இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசாங்கம் தமிழ்நாடு அரசுடன் உறவை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

'டொயின்பீ' பரிசு பெற்ற பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்

'இன்றைய இந்தியாவும் இலங்கை - இந்திய உறவும்' - என்றபொருள் பற்றி கொழும்பில் பேராசிரியர் புல்ஜின்ஸ் பேசினார்.

பேராசிரியர் மேலும் சொன்னதாவது;-

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனைவிட இந்திய மத்திய அரசின் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை அரசுக்கு முக்கியமானவராக இருக்கலாம்.

இந்திய அரசமைப்புப்படி மாநிலங்கள் சக்தி வாய்ந்தவைகளாக உள்ளன அதிக அதிகாரங்கள் கொண்டவையாக அவை மாறிவருகின்றன.

காங்கிரஸ் கட்சி மிகப் பெரும்பான்மையுடன் மத்திய அரசாங்கத்தை நடத்தியபோதும் மாநிலங்களில் பிரதேசக் கட்சிகளே சக்தி வாய்ந்தவையாக விளங்குகின்றன.

இந்தியாவின் 22 மாநிலங்களில் பெரும்பான்மையானவற்றில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளே ஆட்சி நடத்துகின்றன.

இந்த நிலையில் தமிழ்நாடு அரசுடன் தொடர்பை வளர்த்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை முயற்சிக்க வேண்டும்.

இப்படி பேராசிரியர் புல்ஜின்ஸ் சொன்னார். (எ-2)

## ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மல்லிகையின் பணி ஒரு குறியீடு
### அட்டைப்பட ஓவியங்கள் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 9
ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் காத்திரமான, செறிவான, கனதியான இலக்கிய ஆக்கத்துக்கு மல்லிகை சஞ்சிகையின் இருபத்தோராண்டு இலக்கியப் பணி ஒரு குறியீடாகும்.

மல்லிகைப் பந்தலில் மலர்ந்த முதல் மலரான ''அட்டைப்பட ஓவியங்கள்'' என்ற நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய கா. சிவத்தம்பி இவ்வாறு குறிப்பிட்டார்.

டாக்டர். எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கவிஞர் புதுவை இரத்தினதுரை வரவேற்புரை நிகழ்த்தினார்

பேராசிரியர் சிவத்தம்பி தனது வெளியீட்டுரையில் தொடர்ந்து கூறியதாவது:—

மல்லிகை சஞ்சிகையாக இருந்து இருபத்தொரு ஆண்டுகள் சாதிக்க முற்பட்ட இலட்சியத்தை அதே நெறி வழி நின்று பிரசுர களமாகச் சாதிக்க முன்வந்துள்ளது. அதன் முதல் முயற்சி இந்த நூல்.

1965ஆம்ஆண்டு ஆரம்பித்த மல்லிகை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பல கட்டங்களைக் கண்டுள்ளது

அதனால் அது ஒரு வரலாற்றுச் சாதனமாக ஆகிவிட்டது. ஏதோ ஒரு கருத்து நிலைப்பாட்டுடன் செயற்படுவதால் மல்லிகை தானே சர்ச்சைகளுக்குக் காரணமாக இருந்துள்ளது.

இவ்வாறு பேராசிரியர் சிவத்தம்பி தனது வெளியீட்டுரையில் கூறி முடித்தார்.

டாக்டர். எம். கே. முருகானந்தம் தனது தலைமையுரையில் பின்வருமாறு கூறினார்;—

''தமிழ தினசரிப் பத்திரிகைகள் இலக்கியக் கிசுகிசுக்களுக்கு இடமளிக்கக் கூடாது. மாறாக நல்ல ஆரோக்கியமான இலக்கிய விமர்சனத்துக்கு வழி வகுக்க வேண்டும். இன்று நமது மக்கள் மத்தியில் கலாசார விழிப்புணர்வு மலர்ந்துள்ளது. இதனால் வாசிப்புப் பழக்கமும் விரிவடைந்துள்ளது''

இப்படி அவர் கூறினார்.

அடுத்து அறிமுக உரையாற்றிய செங்கை ஆழியான் பின்வருமாறு கூறினார்;—

தனக்கென ஒரு கோட்பாட்டை வகுத்து இலக்கியப் பணியாற்றும் தீவிர எழுத்தாளரான ஜீவா எல்லா அணியினரின் படைப்புக்களுக்கும் இடமளிக்கும் ஒரு சஞ்சிகைப் பத்திரிகை ஆசிரியராவார்.

அட்டைப்பட ஓவியங்கள் என்னும் நூலில் பேட்டி காணப்படும் 33 இலக்கியப் படைப்பாளிகளில் 11 பேர் மட்டுமே முற்போக்கு இலக்கிய அணியைச் சார்ந்தவர்கள். ஏனையோர் அப்படியல்ல.

இருப்பினும் ஏனைய இலக்கிய கோட்பாடுகளை இலட்சியமாகக் கொண்டவர்களையும் மதிக்கும் பத்திரிகை நேர்மை ஜீவாவுக்குண்டு.

இவ்வாறு செங்கை ஆழியான் பாராட்டுரை வழங்கினார்.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா பதிலுரை கூற பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் திரு. பூ. சிறிதர்சிங் நன்றியுரை கூறினார். (இ—9)

## கல்வித் திணைக்கள நியமனங்கள்

யாழ்ப்பாணம் ஜூன் 9
யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர்கள் சிலர் பதவி உயர்வின் மூலம் புதிய நியமனங்களைப் பெற்றுள்ளனர்.

பிரதம கல்வியதிகாரியாக வி தங்கராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம கல்வியதிகாரிகளாக க. கந்தசாமி, கு சோமசுந்தரம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்—

இம்மாதம் முதல் ஆங்கிலக் கல்வியதிகாரியாக முன்னாள் ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரி இ க. குலசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தொடர்ந்தும் ஆங்கில வட்டாரக்கல்வி அதிகாரியின் பணிகளையும் மேற்கொள்வார். (இ- 5)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### யாழ் நீதிமன்றப் பகுதி துப்பாக்கிச் சூடு:
## கதவைத் திற, திற என்று கத்தினார்; சூடு விழுந்தது
### சட்டத்தரணி சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
கோட்டையில் இருந்து சூட்டுச் சத்தங்கள் கேட்ட பொழுது காலஞ்சென்றவர் நீதிவான் நீதிமன்ற தெற்கு எல்லைச் சுவரோரக் கதவை திற, திற என்று கத்தினார். அப்பொழுது அவர் மீது கோட்டையில் இருந்து வந்த சூடு ஒன்று விழுந்தது. அவர் உடனே கதவுக்கு அருகே விழுந்தார்.

கடந்த திங்கட்கிழமை யாழ் நீதிமன்றத்துக்கு அருகே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பின்னர் மரணமான செல்லையா இராமலிங்கத்தின் (60 வயது) மரண விசாரணை வியாழனன்று நடந்தது.

அப்போது சாட்சியமளித்த சட்டத்தரணி தர்மலிங்கம் சோமசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கனக. கேசவன் நடத்தினார்

சாட்சி மேலும் சொன்னதாவது;

சம்பவதினம் காலை 8. 30 மணி அளவில் கோட்டைப் பக்கமாக துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டன.

அப்பொழுது நீதிமன்ற சட்ட நூலகக் கூரை தாழ்வாரத்திற்கு கீழ் நின்றேன்.

காலஞ்சென்றவர் நீதிவான் நீதிமன்ற தெற்கு எல்லைச் சுவரோரமாக இருக்கும் மரக்கதவை தள்ளிக் கொண்டு கதவைத்திற, கதவைத்திற எனக் கத்தினார்.

அப்பொழுது நான் சூடுகள் வருகின்றன. நிலத்தில் விழுந்து படுக்கும்படி சொன்னேன்.

சற்று நேரத்தில் அவரை நோக்கி துப்பாக்கிச் சன்னங்கள் பறந்து வந்து தாக்கின.

அவர் அப்படியே படுத்துக் கொண்டார்.

பின்னர் அவருக்கு முதலுதவி வழங்கப்பட்டது.

இப்படி சட்டத்தரணி சொன்னார் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-10)

## ரயில் சேவை இடை நிறுத்தம்

கொழும்பு ஜூன் 9
கொழும்பு - பதுளை உடரட்டமெனிக்கேரயில் சேவையை ரயில்வே திணைக்களம் இடைநிறுத்தம் செய்துள்ளது.

ரயிலில் குண்டு வைக்கப்படும் என்ற எச்சரிக்கை கிடைத்ததைத் தொடர்ந்தே உடரட்டமெனிக்கேரயில்சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டதாம். (இ.எ)

### மக்கள் முகம்



## பவள விழாவில் கௌரவம்

யாழ்ப்பாணம், ஜூன். 9
மானிப்பாய் இந்துக் கல்லூரி பவளவிழாவில் கௌரவிக்கப்பட்டவர்களில் திரு. வி. கே. செல்வசுந்தரமும் ஒருவர்.

விளையாட்டுத்துறையில் இவர் கௌரவிக்கப்பட்டார்.

தமது கல்லூரிக் காலத்தில் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், கிரிக்கட், கூடைப்பந்தாட்டம், தாச்சி, உடற்பயிற்சி ஆகியவற்றில் கல்லூரிக் கப்டனாக திரு. வி. கே. செல்வசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார்.

இத் தெரிவு அசெம்பிளி மண்டபத்தில் அமரர் வி. வீரசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

கல்லூரிகளுக்கு இடையே, 7 ஆண்டுகள் தொடர்ச்சியாக சாம்பியனாக வந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி உடற்பயிற்சி அணியின் உறுப்பினராக இவர் இருந்தார்.

நீளம் பாய்தல், குண்டு எறிதல், அஞ்சல் ஓட்டம் முதலியவற்றில் நான்கு ஆண்டுகளாக முதவாவதாக வந்தார்.

கல்லூரிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் கப்டனாக இருந்தார்.

கல்லூரிகளுக்கு இடையேயான கரபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் கப்டனாகவும் இருந்தார்.

அகில இலங்கை கரபந்தாட்ட சாம்பியன் அணியில் 7 ஆண்டுகள் தொடர்ந்து உறுப்பினராக இருந்தார்.

இலங்கையின் முதல் தர 'கன்ராக்ட்' பிரிட்ஜ் விளையாட்டு வீரராக பல ஆண்டுகள் விளங்கினார்.

அகில இந்திய பிரிட்ஜ் சாம்பியன் போட்டியில் இலங்கையின் சார்பில் எட்டு ஆண்டுகள் பங்குபற்றினார்.

1976 இல் அகில இந்திய பிரிட்ஜ் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி சுந்தரம் கிண்ணத்தைச் சுவீகரித்த இலங்கை பிரிட்ஜ் அணியில் ஒரு வீரராக இருந்தார்.

இச்சுற்றுப் போட்டியில் 206 அணிகள் பங்குபற்றின. பிரிட்ஜ் விளையாட்டு அணிகளுக்குக் கப்டனாகவும் பணியாற்றி பல பரிசுகளைப் பெற்றார்

இரட்டையர் ஆட்டத்தில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இலங்கை கரம் சாம்பியனாக வெற்றி பெற்றார். (இ-எ)

## நெல்லியடியில் தராசுக்கு முத்திரை

யாழ்ப்பாணம் ஜூன் 9
நெல்லியடிப் பகுதியில் தராசுப்படிகளுக்கு முத்திரையிடும் பணி ஜூன் 2ஆம் திகதி தொடக்கம்நடந்துவருகின்றது 13 - 6 - 86 வரை நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இப்பணி நடைபெறும் என்று யாழ் மாவட்ட உதவி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு அறிவித்துள்ளார். (இ-எ)

## மார்பு நோய் சிகிச்சை நிலையம் சீராக இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 9
மயிலிட்டி மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் சுமார் 70 நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பகுதிக்கு தினசரி வந்து மருந்து வாங்கிச் செல்கின்றார்கள்.

மயிலிட்டி மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்துக்கு நோயாளர் வந்து செல்வதில் எதுவித அச்சமும் ஏற்படத் தேவையில்லை.

இப்படி மயிலிட்டி சுகாதார நிலைய நோயாளர் நலவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. வ. தர்மராசா அறிவித்துள்ளார். (இ - எ)

## ★ வடக்கில் போலி முத்திரைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணத்தில் ஐம்பது ரூபா பெறுமதியுள்ள போலி முத்திரைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

பெறுமதி கூடிய முத்திரைகளை வாங்குவதில் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என யாழ் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பார்சல் ஒன்று அனுப்பவந்த ஒருவரே இந்த முத்திரையை வைத்திருந்தாராம்.

அரசாங்க வெளியீட்டு முத்திரைக்கும் இந்தப் போலி முத்திரைக்கும் இடையில் அனேக வித்தியாசங்கள் இருப்பது ஊழியர்களினால் கண்டுபிடிக்கப்பட்டு அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகத் தெரியவருகிறது. (இ-10)


### ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



கந்தையா கனகசுந்தரம்
(பொலீஸ் உத்தியோகத்தர்)

பொன்னுலகில்: 17-2-1932 பூவுலகில்: 4-6-1981

திதி: 9-6-1986

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எம் இதயங்கள் ஏங்குகின்றனவே. எமக்கு நல்வழி காட்டிய குலவிளக்கே! உங்கள் இனிய முகம் என்றுமே எம் உள்ளத்தில் நிலைத்து விட்டதே! எப்போதும் சிரித்துக்கொண்டு மற்றவர்களையும் சிரிக்க வைப்பீர்களே! இன்று நாம் கண்ணீர் விடும்போது ஆறுதல் இல்லையே!

இந் நினைவு நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர், மருமக்கள்.

மீசாலை வடக்கு, மீசாலை.



### நீத்தார் பட்டியல்

சின்னத்துரை மனோகரன்
(தீசன்)

சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) பவளலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் வடிவுடைநாயகி (அவுஸ்திரேலியா), கார்த்திகேசு (லங்கா சீமெந்து லிமிட்டட்), நந்தகுமாரன் (பனை, அபிவிருத்திச் சபை), உதயணன், வில்வராஜன், அம்பா, அருந்ததி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்துரை மனோகரன் (தீசன்) 6-6-86 அகால மரணமானார். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்

ஐயனார் கோவிலடி,
மல்லாகம்
8-6-86.



### 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



வேலுப்பிள்ளை ஜெயராசா

அன்னையின் மடியில் 15-3-1960 அரக்கர் மடியில் 10-5-1986

எங்கள் குடும்பத்தின் செல்வமே! நீ எங்களை விட்டு 31 நாட்கள் பிரிந்தாலும் உமது உருவம் எங்கள் நினைவில் எங்களிடம் என்றுமே இருக்கும். நீ எம்மையும் நண்பர்களையும் உறவினர்களையும் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டு காலனுடன் சென்றாலும் உமது நினைவு என்றும் நீங்காது உமது ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர் பூக்களால் அஞ்சலி செய்யும்,

பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

வற்றாப்பளை,
முள்ளியவளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒருவன் வார்த்தையாலும் பிறரைத் துன்புறுத்தக் கூடாது. கடுமொழிகள் பேசுவதால் ஒருவனது சுபாவமே கொடுமையாக மாறுகிறது.

— அன்னை சாரதாதேவி


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல. 15 2ஆம் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.    09-06-86    தொலைபேசி 24805, 22078    த. பெ.28


# ஆசிய மக்களுக்கு ஆபத்து வருகிறது

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் இலங்கை அரசாங்கத்தைக் கடுமையாக எச்சரித்திருக்கிறார். ஈரான் நாட்டின் தூதுவராகப் புதிதாகக் கடமை ஏற்றிருக்கும் ஜனாப் காஸேம் சோல்தனியே அரசாங்கத்துக்குப் பெரும் முன்னெச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

இலங்கை இஸ்ரவேலுடனான உறவுகளைப் பலப்படுத்தினால் அது பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரும். ஆசியப் பிராந்தியத்திலேயே அவர்களின் ஆக்கிரமிப்புத் தொடங்கிவிடும். இலங்கையில் கால் ஊன்றி ஏனைய நாடுகளுக்கும் இடைஞ்சல்களைக் கொடுப்பார்கள். அவர்களின் அட்டூழியங்களும் அடிமை கொள்ளும் நடவடிக்கைகளும் இந்தப் பிராந்தியத்தின் அமைதியைக் குலைத்துப் பெரும் அழிவுகளுக்கு வகை செய்யும். இவ்வாறு ஜனாப் சோல்தனி எச்சரித்திருக்கிறார்.

இஸ்ரவேலினால் முஸ்லிம்களுக்கு, முஸ்லிம் நாடுகளுக்கு மட்டும்தான் ஆபத்து என்பதில்லை. உலக நாடுகளுக்கே அது எமன் போன்ற எதிரி என்றும் இலங்கைக்கான புதிய ஈரானியத் தூதுவர் இடித்துரைத்திருக்கிறார்.

ஜனாப் சோல்தனி ஒரு முஸ்லிம் நாட்டின் பிரதிநிதி என்ற வகையில் அந்தக் கண் கொண்டு இஸ்ரேலிய - இலங்கை உறவைப் பார்க்கிறார் என்று எமது அரசு நினைக்கலாம். அவரது எச்சரிக்கையை ஒரு பொருட்டாகவும் எடுக்காமல் அசட்டையாகவும் இருக்கலாம்; இருக்கும்.

ஆனால் அவர் ஆசிய நாடு ஒன்றின் தூதுவர் என்ற வகையில் இலங்கை—இஸ்ரவேலிய உறவை தூரதிருஷ்டியுடன் பார்த்திருக்கிறார் என்றே நாம் கருதுகிறோம்.

இஸ்ரவேல் அமெரிக்காவின் நட்பு நாடு மட்டுமன்றி ஒரு ஏஜண்டும் ஆகும். இரண்டுக்கும் இடையில் உள்ள உறவு பிரிக்க முடியாத உறவு. சிற்சில வேளைகளில் உலகத்துக்குக் காட்டுவதற்காக, அவை கருத்து வேறுபாடு உள்ளவையாகக் காட்டிக் கொள்வதுண்டு. எனினும் அவற்றின் அந்தக் கருத்து வேறுபாடு வெறும் நடிப்பே அன்றி உண்மையானதல்ல.

பல வருட காலமாக அறுக்கப்பட்டிருந்த இஸ்ரேல்—இலங்கைத் தொடர்பு புதுப்பிக்கப்படுவது வெறும் வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமல்ல. இராணுவ உதவி. கூட்டுறவுக்காக என்பது இப்போது வெளிப்படையாகி வருகிறது. அத்தோடு ஆசியாவில் அமெரிக்க ஆதிபத்தியத்தை உருவாக்கித் திணித்து, ஸ்திரப்படுத்துவதற்கான நீண்ட விரிந்த திட்டத்தின் ஆரம்பமே இந்த இலங்கை — இஸ்ரவேலிய உறவு.

இலங்கையில் இனப்பிரச்சினை. இந்தியாவில் பஞ்சாப் பிரச்சினை. அந்த இரண்டையும் பாவித்துக் கொண்டு அமெரிக்கா, இந்தியாவுக்குத் தொல்லை தொந்தரவுகளைக் கொடுத்து அதன் மாஸ்கோ சார்பு நிலைக்கு ஒரு பாடம் படிப்பிக்கத் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது.

அதற்காக, இலங்கையையும் பாகிஸ்தானையும் தனது கைக்குள் போட்டுக் கொண்டாகிவிட்டது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு அமெரிக்கா அடிக்கடி அடிக்குரலால் 'கேரி' வருகிறது. ஆனால் அமெரிக்காவின் உண்மை நிலை அதுவல்ல.

யாழ்ப்பாணத்தில் போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் பத்து நாட் போர் நடந்த போது இங்கு வந்து தங்கி நின்றதாகக் கூறி "வால் ஸ்றீற் ஜேர்ண"லில் எழுதிய டொம் மார்க்ஸின் கருத்துத்தான் உண்மையான அமெரிக்கக் கருத்து.

அரசாங்கம் உத்தியோகபூர்வமாகச் சொல்லாமல் தனது ஓர் ஏஜண்ட் மூலம் சொல்விப்பதும் நவீன காலத்துப் பிரசாரத் தந்திரம்.

எனவே இலங்கை — இஸ்ரவேல் — அமெரிக்க உறவிலும், இணைப்பிலும் பெரும் நாசகாரத் திட்டம் ஒன்றே அடங்கி இருக்கிறது.

இலங்கையில் மட்டும் அல்ல, பாகிஸ்தானில் மட்டும் அல்ல, இந்தியாவில் மட்டும் அல்ல முழு ஆசியாவிலுமே, முதலில் தனது செல்வாக்கையும், அடுத்து தனது ஆதிக்கத்தையும். இறுதியில் தனது ஆக்கிரமிப்பையும் திறம்பட அமுல் நடத்தவே அமெரிக்கா படிப்படியாக, மெது மெதுவாகக் காரியம் ஆற்றி வருகிறது.

இது இலங்கைக்குத் தெரியாமல் இல்லை. இந்தியாவுக்கும் தெரியாமல் இல்லை. ரஷ்யாவுக்கும் தெரியாமல் இல்லை.

யாருக்குத் தெரிந்து என்ன, தெரியாமல் என்ன. கஷ்டப்பட இருப்பவர்கள் ஆசிய நாட்டு மக்கள் தான்..!

# பெரு ஜனாதிபதியை கொல்ல சதி முயற்சி!

## தெய்வாதீனமாக உயிர் தப்பினார்

லிமா, ஜூன் 8

பெரு நாட்டில் ஜனாதிபதி அலெக்ஸ் காஸியாவைக் கொல்ல தீவிரவாதிகள் எடுத்துக்கொண்ட சதி முயற்சி தோல்வியில் முடிவுற்றது. அவர் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

எனினும் இந்தச் சதி முயற்சித் திட்டம் செயற்பட்ட போது நான்குபேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

தலைநகர் லீமாவில் அதிபர் காஸியா பங்குபற்றிய இராணுவ நிகழ்சி ஒன்றில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன.

முதற்குண்டு அதிபர் காஸியா நிகழ்ச்சிக்கு வருகை தருவதற்கு 5 நிமிடங்கள் முன்னதாகவே வெடித்தது.

அடுத்து மூன்று குண்டுகள் அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று சற்று வேளையில் வெடித்தன.

புரட்சி இயக்க உறுப்பினர்களே இந்தக் கொலை முயற்சிக்கு சூத்திரதாரிகள் என பொலீஸார் தெரிவித்தனர்.

இதேசமயம் மக்கள் புரட்சித் தலைமையின் உறுப்பினர்கள் எனத் தம்மைக்கூறிக்கொண்ட இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் தலைநகர் லீமாவின் புறநகர் வானொலி நிலையம் ஒன்றைத் திடீரெனக் கைப்பற்றினர்.

வானொலி நிலையம் சில மணிநேரம் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த வேளையில் —

தலைநகரில் அமுல்செய்யப்பட்ட நெருக்கடி நிலை, ஊரடங்குச் சட்டம் ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் செய்தி ஒன்றையும் அவர்கள் ஒலிபரப்பினர். (உ-ஒ)

## உக்ரெயின் பகுதியில் கதிர் வீச்சு ஆபத்து!

### 50 மைல் பாயப் பிரதேசம்

மாஸ்கோ, ஜூன் 8

ரஷ்யாவில் செர்னோபில் அணு உலை அனர்த்தத்தை அடுத்து உக்ரெயின்மாநிலத்தில் 50மைல் தொலைவு வரையான பகுதி கடும் கதிர் வீச்சு அபாயப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் செய்தி ஏஜன்சி பிராவ்தா இதை அறிவித்துள்ளது

60000 குழந்தைகள் உட்பட பல ஆயிரக்கணக்கான மக்கள் இப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அணுக்கதிர் வீச்சு அபாயம் இந்தப் பகுதிகளில் இன்னும் இருப்பதாலேயே இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஐ)

## வெளி உலகில்

## ஈரான் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஈராக்கில் அரச வரவேற்பு

பாரிஸ், ஜூன்.8

ஈரான் நாட்டின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரான மசூர் ராஜாவிக்கு ஈராக்கில் அரச வரவேற்பு அளிக்கப்பட்டது

மசூர் ராஜாவி தாம் தங்கியிருந்த பிரான்ஸ் நாட்டைவிட்டு வெளியேறி ஈராக் சென்றிருக்கிறார்.

பிரான்ஸில் பொலீஸார் அவரது இல்லத்தை முற்றுகையிட்டு அவரது அரசியலில் நடவடிக்கைகளை அவதானிக்க முற்பட்டதையடுத்தே ராஜவி அங்கிருந்து வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது முக்கியமான ஐந்து ஆதரவாளர்களுடன் அவர் ஈராக் வந்து சேர்ந்தபோது அங்கு அவருக்கு அரச வரவேற்பளிக்கப்பட்டது.

ராஜாவியின் மக்கள் முஜாதீன் இயக்கத்திற்கு ஈரான் நாட்டில் தடைவிதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ-ஒ)

## உறவினரைச் சந்திக்க அனுமதி

மாஸ்கோ ஜூன் 8

அமெரிக்காவில் இருக்கும் தமது குடும்பத்துடன் சேர்வதற்கு இருநூறுக்கும் அதிகமான சோவியத் பிரசைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்ல விரும்பும் ரஷ்ய பிரசைகளின் விண்ணப்பங்களுக்கும் அனுமதி அளிக்கப்பட இருப்பதாக சோவியத் யூனியன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-ஒ)

## பால்ய மணமக்கள் பிரிட்டன் வரத்தடை

லண்டன், ஜூன் 8

பால்ய விவாகம் புரிந்த வெளிநாட்டவர்கள் லண்டனுக்குள் அனுமதிக்கப்படுவது ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்து தேசத்தின் குடியுரிமைச் சட்டத்தில் மாறுதல் செய்ததையடுத்தே 16 வயதுக் குட்பட்ட மணமக்களுக்கான அனுமதி ரத்தாகியுள்ளது.

சில நாடுகளில் 16 வயதுக்குட்பட்டவர்கள் திருமணம் புரிவது அந்தத் தேசச் சட்டங்களின்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது

இங்கிலாந்தில் நிரந்தரமாகக் குடியுரிமை பெற்ற சிலர் தமது தாயகம் சென்று அந்நாட்டின் தேசவழமைச் சட்டத்தின் கீழ் 16 வயதுக் குட்பட்டவர்களை மணமுடித்து தம்முடன் அழைத்து வருகின்றனர்கள்.

பிரித்தானிய நாட்டின் சட்ட திட்டங்களுக்கு இச்செயல் முரண்படுவதால், குடியுரிமைச் சட்டத்தில் மாறுதல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது என குடிவரவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-ஒ)

## சீன-ரஷ்ய ராஜீய உறவு

பீகிங், ஜூன் 8

சீனாவும் ரஷ்யாவும் ராஜீய உறவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளன.

இரு நாடுகளும் தூதுவர்களை பரிமாறிக்கொள்ளவும் தீர்மானித்துள்ளன.

1960 ஆம் ஆண்டில் இருந்து இரு நாடுகளின் உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது. சித்தாந்தக் கருத்துவேறுபாடே இதற்குக் காரணமாகும்.

ரஷ்யாவின் தூதர் சீனாவில் ஷாங்காய் நகரிலும் சீனாவின் தூதுவர் ரஷ்யாவின் லெனின்கிராடிலும் பணியாற்றுவர். (இ-எ)

## விலையுயர்ந்த கறுப்புவைரம்

அம்ஸ்ரடாம், ஜூன்8

உலகின் அதி விலையுயர்ந்த "கறுப்புவைரம்" ஒன்று ஒல்லாந்து தேசத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

42 கரட் உடைய இந்த கறுப்பு வைரம் உலகிலே இந்தரகவைரங்களில் மிகவும் பெரியது என கணிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 125 கரட் ஆக இருந்த இந்த வைரத்தைத் துப்புரவு செய்து பாவனைக்கு உகந்ததாக உருவாக்க மூன்று வருடத்துக்கும் அதிகமாக எடுத்ததாம் (உ-ஒ)

## சிறைத் தண்டனை

சியோல், ஜூன் 8

கடந்த டிசம்பர் மாதம் தென் கொரியாவிலுள்ள அமெரிக்க கலாசார நிலையத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்து ஜாகை அமைத்துக் கொண்ட பத்து மாணவர்களுக்கு ஒருவருடம் முதல் மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (உ-ஒ)

**பொய்யாமொழி**



குறள்:

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

பொருள்:

அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர் நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறம் அல்லாதவற்றைச் செய்யார்.

## யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு ரூ.2லட்சத்து 87ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ் மாவட்டத்தில் மகாபோகத்தில் அழிவுற்ற நெற் செய்கைக்கு ரூபா 2 லட்சத்து 86ஆயிரத்து 961 ரூபா 78 சதம் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்ட விவசாய காப்புறுதி உதவிப் பணிப்பாளர் திரு சு. சிவகுரு இத்தகவலை வெளியிட்டார்.

915 ஹெக்டர் நெற்செய்கை காப்புறுதி செய்யப்பட்டது காப்புறுதி செய்த விவசாயிகளின் எண்ணிக்கை 701 ஆகும். காப்புறுதித் தொகை ரூ. 46,536 மட்டுமே.

சாவகச்சேரி, நல்லூர், வேலணை, தொல்புரம், கீரிமலை, உடுவில், புலோலி, அம்பன், கைதடி, புங்குடுதீவு, உரும்பராய்ப் பகுதிகளில் உள்ள விவசாயிகளே இவ்வாறு கமத்தொழில் காப்புறுதி செய்தவர்களாவர்.

இவற்றுள் அம்பன் பகுதியில் ஆகக் கூடிய தொகையில் 336 ஹெக்டர் ஏக்கர் காப்புறுதி செய்யப்பட்டது.

இப்பிரதேசங்களுள் வேலணை பிரிவில் ஆகக் கூடிய தொகையாக ரூபா 73,590 நஷ்டஈடாக வழங்கப்பட்டது.

இவ்வாறு திரு. சிவகுரு விளக்கம் அளித்தார். (இ-4)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இன்றுதேவைப்படுவது என்ன?

## பிரபல ஆஸி, பத்திரிகை தலையங்கம்

முறையான அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதினால் மட்டுமே மோசமடைந்து வரும் இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் அதன் மூலம் தான் சிவில் யுத்தத்தில் இருந்து நாட்டை மீட்க முடியும்

அப்பாவிக் குடிமக்கள் உட்பட சுமார் மூவாயிரம் மக்களைப் பலி கொண்ட இரண்டரை ஆண்டு கால வன்செயலின் பின்னர் இதுதான் உணரப்பட்டிருக்கிறது

தமிழ்ச் சிறுபான்மையினரின் குறைகளை களைய ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் சிங்கள அரசு தவறியதன் மூலம் பிரச்சினை இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினரும் தமிழ்த் தீவிரவாதிகளும் மிருகத்தனமாக நடந்து கொள்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

இன்னும் பேச்சு மூலம் தீர்வு காணுவது பற்றி திரு. ஜெயவர்த்தன பேசுகிறார்.

தமிழர், சிங்களவர், முஸ்லிம் சமமான தொகையில் வாழும் கிழக்கு மாகாணத்துக்கு ஏதோ ஒரு விதமான சுயாட்சி வழங்கப்படும் என்று கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது

சில மாதங்களுக்கு முன்னர் இந்தியா பேச்சுக்களுக்கான சூழ்நிலையை உருவாக்கியது.

மத்திய அரசு கட்டுப்பாட்டை வைத்திருக்க வேண்டும் என்ற திரு. ஜெயவர்த்தனவுக்கும்—

> 'தி ஏஜ்' என்ற ஆங்கில நாளிதழ் ஆஸ்திரேலியாவில் வெளியாகின்றது. அப்பத்திரிகையின் ஏப்ரல் 9 இதழில் 'இலங்கையில் தீர்வுகாண்பது'- என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் ஒன்று வெளியானது.
>
> அதன் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

தனிநாடு வேண்டும் என்று கோரும் தீவிரவாதிகளுக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்த இந்தியா முயற்சித்தது

தமிழ்ப் போராளிகள் இந்தியாவைத் தளமாகப் பாவிப்பதைத் தடுப்பது; அதே நேரத்தில் தமிழருக்கு ... சலுகைகளை திருஜெயவர்த்தனா ... வது — இவைதான் இந்தியாவின் முயற்சியின் பின்னணி என்று கருதப்பட்டது. அதற்கிணங்க யுத்த நிறுத்தம் ஒழுங்கு செய்யப்பட்டது. இதன் மூலம் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சந்தர்ப்பம் சில மாதங்களுக்கு முன் உருவானது.

ஆனால் பேச்சுக்கள் முறிவடைந்தன.

கடுமையாக வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் கூடிய மாகாண சபைக்கு மேலாக எதையும் தமிழ் மிதவாதிகளுக்கு வழங்க கொழும்பு தயாராக இல்லை. அப்படி வழங்குவதை தங்களின் தனித்துவத்துக்கு வரும் ஆபத்து என்று சிங்களவர் கருதுவார்கள் என்பதே இலங்கை அரசு கூறும் காரணம். இலங்கையின் இந்தப் போக்கு இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது

பிரச்சினை தொடங்கிய காலத்திலிருந்து கடந்த 3 ஆண்டுகளாக தனது பாரபட்சமான நடவடிக்கைகளை மறைப்பதற்கு கூட சிறிதளவேனும் முயற்சி எடுத்துக் கொள்ளாதவராக என்பது ... ஜெயவர்த்தன இருக்கிறார்.

முழு அளவிலான இராணுவ நடவடிக்கையை எடுக்கப்போவதாக திரு. ஜெயவர்த்தன அண்மையில் வெளிப்படையாகக் கூறி விட்டார்.

இலங்கைக்கு இன்று தேவைப்படுவது யுத்தம் அல்ல யுத்தத்தில் எவருமே வெல்ல முடியாது

எல்லா இன மக்களின் உரிமைகளையும் வேறுபாடுகளையும் மதிக்கக் கூடியதான சமஷ்டி அரசியல் முறை ஒன்றை உருவாக்குவதற்கு மனதார முயற்சி எடுக்க வேண்டும். இதுதான் இன்றைய தேவை.

அப்படியான ஓர் ஏற்பாட்டுக்கு, திரு. ஜெயவர்த்தன போகும்வரை காத்திருக்க வேண்டி ஏற்படலாம். ஆனால் காலம் பிந்தி விடுமே! (உ-எ)

## கூடுதல் விலைக்கு பொருள்களை விற்க வேண்டாம்

### வர்த்தகர்களுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9

கூடுதல் விலைக்கு பாவனைப் பொருள்களை விற்க வேண்டாம் என்று யாழ் வர்த்தகர் சங்கம், மாவட்ட வர்த்தகர்களைக் கேட்டுள்ளது.

இன்றுள்ள கஷ்டமான சூழ்நிலையில் பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய விதத்தில் எக்காரணம் கொண்டும் பாவனைப் பொருள்களின் விலையை அதிகரிக்காது, உரிய விலைக்கு விற்க வேண்டும்.

இப்படி யாழ் மாவட்ட வர்த்தகர்களை, வர்த்தகர் சங்கம் கேட்டுள்ளது. (இ-எ)

## உறுதியான உடலும் மனமும் இன்றைய நிலையில் தேவை

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்9

உறுதியான உடலும், உறுதியான மனமும் இன்றையநிலையில் எமக்கு அவசியமானவை. விளையாட்டுக்களின்மூலம் உள்ளமும் உடலும் உறுதி அடைகின்றன

யாழ். நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தமது உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்:

எமக்கு நிலையாக உள்ள பெரும்சொத்துகல்வி எத்தகைய இக்கட்டுகள் வந்தாலும் அவற்றையெல்லாம் வென்று நாம் கல்வியைத் தொடர வேண்டும்.

இடையிடையே ஏற்படும் சிறு சலசலப்புகளினால் மனம்சோர்ந்துநாம் கல்வி முயற்சிகளை விட்டுவிடலாகாது.

இவ்வாறு அவர் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. சி. மு. கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நல்லூர் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி, அலுவலகக் கல்வி அதிகாரி திரு. க. மகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இறுதியில் வெற்றிபெற்றவர்களுக்கு பிரதம அதிதி பரிசில்களை வழங்கினார். (இ-7

## லொறி தாக்குதல் சம்பவம் குறித்து கொழும்புக்குஅறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்9

கிளிநொச்சியில் வைத்து ஷெல் தாக்குதலினால் உணவுமுத்திரைகளுடன் வந்த லொறி எரிந்ததும் அச்சம்பவத்தில் யாழ்செயலக ஊழியர் ஒருவர் உட்பட இரண்டுபேர் மரணமான சம்பவம் குறித்தும் கொழும்புக்கு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பொலீஸ் மூலம் யாழ் அரச அதிகாரிகள் இத்தகவலை சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு நேற்று அறிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நொதேண்
சுண்டுக்குளி
O/L Day Classes
2வது பிரிவு
O/L 3வது பிரிவு
(மாலை வகுப்பு)
ஆரம்பமாகின்றது


# உதயன்

09 06 1986 திங்கட்கிழமை


நொதேண்
சுண்டுக்குளி
A/L 88
தூய, பிரயோக கணிதம்
திரு. A.B.A. ஜெயம் B.Sc.
பௌதிகவியல்
திரு. பத்மநாதன்
இன்னும் குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

## வித்தாரம்

வா'ரும் முரளி யாரே, என்ன கடைப் பக்கம் போய் வாறீர் போலை.

நான் நேற்றைக்குச் சொன்னதும் நீர் பயந்து விட்டீரோ. மேலும் மேலும் ரவுணிலை சாமான்களின்ரை விலையள் உயர்ந்தாலும் எண்டு நினைச்சு சாமான்களை ஒரே அடியாய் வாங்கிக் கட்டிக்கொண்டு வாறீரோ. நீர் விஷயகாரன்தான்.

இப்ப ஒரு சின்ன விஷயம் எனக்கு வெளிச்குது. விலை ஏறிறத்துக்கு முன்னம் சாமான்களை வாங்கிக் கொஞ்சக் காசை மிச்சம் பிடிச்சுப் போடுவம் எண்டு நீ நினைச்ச மாதிரித்தான் வியாபாரிமாரும் சந்தர்ப்பம் கொஞ்சம் சாதகமாய் இருக்கையிக்கை கொஞ்சக் காசை தேடிப்போடுவம் எண்டு நினைக்கினம். அப்பிடித் தானே . . . !

உந்தக் காசு தான் அப்பா எல்லாரையும் பழுதாக்கிறது.

அதை விடு. உனக்கு ஒரு விஷயம் சொல்லப் போறன் கேள். இது கொஞ்சம் பழசாய் இருக்கலாம் ஆனால் நல்ல சுவையானது.

கொழும்பிலை இருக்கிற மிகப் பெரிய அரசியல் (அரசாங்கத்) தலைவர்களில் ஒருவற்றை அந்தரங்கக் காரியதரிசியளிலை ஒருவர் யாழ்ப்பாணத் தமிழர். அவர் அடிக்கடி இஞ்சை வாறயில்லை. ஒரு முறை தவிர்க்க முடியாத காரியமாய்வந்திட்டார்.

எங்கடை தம்பிமாரிட்டை அந்த அந்தரங்கத்தார் விருந்தினராக வேண்டிப் போச்சு. அவரிட்டை கறக்க வேண்டிய விஷயங்களைக் கறந்த பிறகு கொஞ்ச நாளிலை அவை விட்டிட்டினம்.

அவர் கொழும்புக்குப் போய் தனது பெரியவரிட்டை விஷயத்தைச் சொன்னார்.

அந்தரங்கத்தாருக்கு என்ன நடந்தது என்பதை அறியுறதுக்கு முன்னுக்கு, பெரியவர் தன்னைப் பற்றி என்ன விசாரிக்கப்பட்டது, இவர் ஏதாவது தப்புத் தண்டாவாக எதையும் உளறிக் கொட்டிவிட்டாரோ எண்டதை அறியிறதிலையே அவசரம் காட்டினாராம்.

நான் உந்தத் தீவிரவாதியள் விஷயத்தில் அவ்வளவு தீவிரமாய் இல்லை எண்டு சொன்னனியோ?

நான் உந்தக் கொந்தராத்து விஷயத்திலைதான் கூடிய அக்கறை எண்டு சொல்லாதையேன்.

ஆயுதங்களுக்குப் பொறுப்பானவர் தான் உங்கடை பெடியன் விஷயத்திலை சூடாறிக்கிறவர் எண்டு சொல்லாதையேன். எனக்கெண்டா உங்கடை விஷயத்தை சமரசமா, சமாதானமா தீர்க்கிறது தான் விருப்பம்.

ஆனால் ஆகப் பெரியவரைக் கெடுக்கும் விதத்திலை முந்தநாள் வந்த சின்னனுகள் தான் நடந்து கொள்ளுதுகள் எண்டு மூச்சு விடாமல் சொல்லி முடிச்சாராம்.

இதைக் கேள்விப்பட்டதும் —

தென்னிலங்கையிலை நடக்கிற கூட்டங்களிலை தீவிரவாத விஷயத்திலை "அப்பிளாஸ்" வாங்க இவர் பேசுறதெல்லாம் அப்ப நடிப்புத் தானோ எண்டு நான் சந்தேகப் பட்டேன்.

மேடையளிலை அருசுருகாய் இருந்தாலும் இவருக்கும் பெரியவருக்கும் அவ்வளவு ஒட்டுறவு இல்லை எண்டது பரம ரகசியம். இரண்டு சின்னனுகள் வந்தபிறகு தான் உந்த நிலைமை உண்டானது.

அது இண்டைக்கு நேற்றைக்கு இல்லை. பெரியவர் சர்வ வல்லமை படைச்சவராக்கப்பட்ட பின்னரே தெறிப்பு வந்து விட்டுது. இப்ப கொஞ்சம் மேலும் முறிஞ்சிருக்கும். அவ்வளவு தான்!

இக்கிண்ணேடி

# கிளிநொச்சியில் வீட்டு வளவுகளிலும் பற்றைக் காடுகளிலும் சடலங்கள் அடக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

கிளிநொச்சிப் பகுதியில் இறந்த பலரது சடலங்கள் வீட்டுவளவுகளுக்குள்ளும், அயலில் உள்ள பற்றைக் காடுகளுக்குள்ளும் குழி வெட்டிப் புதைக்கப்படுவதாக அறிய வந்துள்ளது.

கடந்த நான்கு நாட்களாக கிளிநொச்சியில் நடைபெற்ற ஷெல் தாக்குதல்களினாலும் பொம்மர் குண்டு வீச்சுக்களினாலும் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அவர்களது சடலங்கள் பல முறைப்படி தகனம் செய்ய முடியாத நிலையில் வீடுகளுக்குள்ளும் வீதிகளிலும் கிடப்பதாகத் தெரியவருகிறது.

அவற்றைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று முறைப்படி தகனம் செய்ய முடியாத சூழ்நிலை அங்கு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனால் சடலங்கள் ஆங்காங்கே வீட்டுவளவினுள்ளும் அயலிலுள்ள பற்றைக்காடுகளிலும் குழி வெட்டிப் புதைக்கப் படுகின்றன.

வீதிகளில் இறந்த சிலரது சடலங்களை நாய்கள் இழுத்துச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

(உ—10)

## மயிலிட்டியில் சனியன்று மோதல்

காங்கேசன்துறை, ஜூன் 9

பலாலி முகாமில் இருந்து வெளியே புறப்பட்ட படையினருக்கும் இளைஞர் கோஷ்டிக்கும் இடையில் மயிலிட்டியில் கடந்த சனிக்கிழமைபகல் மோதல் இடம்பெற்றது.

மோதலை அடுத்து ஏவப்பட்ட ஷெல்களால் தையிட்டிப் பகுதியில் உள்ள சில வீடுகள், ஹறணி சன சமூக நிலையம், காங்கேசன் துறையில் உள்ள சில கட்டடங்கள் ஆகியவை சேதம் அடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

பின்பு மாலையில் இடம் பெற்ற ஹெலித்தாக்குதலில் பல வீடுகள் சேதம் அடைந்தன.

கடலிலும் ஷெல் வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதனால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

(உ-68)

## பூட்டப்பட்ட கடைகள் குறித்து சமரசத் தீர்வு

### வர்த்தகர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9

பொ. சோமசுந்தரம் அன் கம்பனி, அசோசியேட்டட் மோட்டோர்ஸ் அன் எலக்ரிக்கல்ஸ், நாஷனல் மோட்டோர்ஸ் ஆகிய ஸ்தாபனங்கள் தொடர்பாக சமரசத் தீர்வு ஒன்று ஏற்பட்டுள்ளதாக யாழ் வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக யாழ் வர்த்தகர் சங்கம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

தாபனங்களின் பிரதிநிதிகள், தாபனங்களைப் பூட்டித் திறப்புக்களை வைத்திருக்கும் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் எமது சங்கப் பணிமனையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். அதன் மூலம் இப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவைச் சங்கம் கண்டு உள்ளது.

இப்படி யாழ் வர்த்தகர் சங்கத்தின் அறிக்கை கூறுகிறது

(உ-எ)

## பருத்தித் ...

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை நகரில் வசித்த மக்கள் பீதியினால் பாதுகாப்பான இடம் பெயர்ந்து சென்று கொண்டிருந்தனர்.

(உ-109)

## இடதுசாரி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பக்கங்களில் ஏற்படும் உயிரிழப்புகளையும் தவிர்க்கலாம்.

போராளிகள் அமைப்புகளுடன் பேசுவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

— இவ்வாறு திரு. ஜெயவர்த்தன கூறியதாக பி. பி. ஸி. அறிவித்தது.

## லொறி .

( 3ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

உணவு முத்திரைகள் எரிந்து போன விஷயம் வறுமை நிவாரணத் திணைக்கள ஆணையாளருக்கும் நேற்று பொலீஸ் மூலம் அறிவிக்கப்பட்டது.

விவரமான அறிக்கை ஒன்று விரைவில் யாழ் அரச அதிபரினால் கொழும்பில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

(இ-எ)

## ஷெல் விழுந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனது ஐந்து குழந்தைகளும் ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

அரைமணி நேரத்துக்கும் அதிகமாக குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

குழந்தைகள் பயத்தில் வீரிட்டு அலறத் தொடங்கினர்.

### குழந்தைகள் நடுவில் விழுந்தது

அச்சமயம் ஏதோ ஒரு பொருள் வீட்டு ஓலைக் கூரையைத் துளைத்துக் கொண்டு குழந்தைகளின் நடுவில் விழுந்து பயங்கரமாக வெடித்தது.

அந்தக்கணமே குழந்தைகள் தூக்கி வீசப்பட்டனர். குழந்தைகளின் உடல்கள் துண்டு துண்டாகச் சிதறின.

எனக்குத் தலையிலும் தொடையிலும் காயங்கள் ஏற்பட்டன. வீடு முழுவதும் சதைத்துண்டுகளே கிடந்தன.

—இப்படி அந்தத்தாய் சொன்னார்.

இதற்கு மேல் அவரால் பேசமுடியவில்லை.

(அ-எ-10)

## செயலக . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்; மக்கள் வாழும் பகுதிகளில்உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்- இவற்றை வலியுறுத்தி மகஜர் ஒன்றை அரச அதிபர் ஊடாக அரசுக்குச் சமர்ப்பிக்க தொழிற் சங்கங்கள் திட்டமிட்டுள்ளன என்று தெரியவருகிறது.

## சரத்திற்கு அஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

அமரர் சரத் முத்தெட்டுவேகம அஞ்சலிக் கூட்டம் நல்லூர் இந்து விடுதியில் நாளை செவ்வாய் காலை 9 மணிக்கு நடைபெறும்.

மனித உரிமைக்கான வெகுஜன இயக்கம் இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது.

இயக்கத்தின் உபதலைவர் சட்டத்தரணி இ. சீவரட்ணம் தலைமை வகிப்பார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, யாழ் ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் உட்படப் பலர் பேசுவர். (உ-எ)

## அஞ்சலி கூட்டம்

சாவகச்சேரி ஜூன் 9

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் அமரர் திரு. த. காசிநாதன் அவர்களின் உருவப்படத் திரை நீக்கமும் அஞ்சலிக் கூட்டமும் இன்று நடைபெறும்.

அதிபர் திரு. தி. இ. கணேசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்ச்சியில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா, உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவார்கள்.

(உ-3)

## அஸ்கிரிய மகாநாயக்க தேரர் முயற்சி

கொழும்பு, ஜூன் 9

சிங்கள பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக ஒரு கொடியின்கீழ் எல்லா பௌத்த நிறுவனங்களையும் ஒன்று சேர்க்கும் நடவடிக்கையில் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வண. பலிபான சந்தானந்த ஈடுபட்டுள்ளார்.

இலங்கை பௌத்த சிங்கள சங்கத்தின் 10 கிளைகள் தென்பகுதியில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன.

(உ-எ)

## ஒப்பந்தக்காரர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் ஜூன் 9

வடமாகாணஅரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணஞ்செய்யப்பட்டது.

வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் இந்த அங்குரார்ப்பணக்கூட்டம் நடந்தது. அன்றைய தினம் தற்காலிக நிர்வாகிகள் தெரிவுசெய்யப் பட்டனர்.

நிரந்தர நிர்வாகிகளின் தெரிவு இம்மாதம் பதினைந்தாம் திகதி காலை ஒன்பது மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

## ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 9

இன்று யாழ் நகரில் நடைபெற இருந்த இலங்கை அஞ்சல்தொலைத் தொடர்பு உத்தியோகஸ்த்தர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் மறுஅறிவித்தல் வரை ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

போக்குவரத்து சீர் கெட்டிருப்பதே இதற்குக் காரணம். (உ-10)

## விளையாட்டரங்கு

# யூனியன் அணி வெற்றி

### மத்திய கல்லூரி தடுமாற்றம்!

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம் ஜூன் 9

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எதிரான 17 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் ஆட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சிறப்பாக விளையாடி முதல் இன்னிங்ஸ் ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மத்திய கல்லூரி வீரர்களில் அசிரத்தையான பந்து தடுப்பும் —

கவனயீனமான துடுப்பாட்டமுமே அவர்களுக்குத் தோல்வியைத் தேடிக் கொடுத்தன.

யூனியன் கல்லூரி தரப்பில் அணித் தலைவர் ஈ. பி. ஏ. பொன்விலியஸ், ஸி. குலேந்திரன், ஆர், எட்ரிஜ், ரி. கே. தீசன் ஆகியோர் சிறப்பாக விளையாடி தமது அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

இந்த ஆட்டம் கடந்த சனிக்கிழமை யூனியன் கல்லூரி திடலில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி வீரர்கள் நிதானமாக ஆடி தமக்கு ஒதுக்கப்பட்ட 210 நிமிட நேரத்தில் 9 விக்கெட் இழப்புக்கு 263 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஈ. பி. ஏ. பொன்விலியஸ் 82, ஸி.குலேந்திரன் 83, ஆர். எட்ரிஜ் 51, ஆர். கோமேஸ்வரன் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

மத்திய கல்லூரி வீரர் பி. முரளிதரன் 17 ஓவர்கள் பந்து வீசி 59 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை விழ்த்தினார்.

யூனியன் கல்லூரி வீரர்களை பல தடவைகள் ஆட்டமிழக்கச்செய்ய சந்தர்ப்பம் கிடைத்த போதும் மத்திய கல்லூரி வீரர்கள் தமது தவறான பந்து தடுப்பினால் அவற்றைக் கோட்டை விட்டனர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி வீரர்கள் திறமையான துடுப்பாட்ட வீரர்களாக இருந்த போதும் கவனயீனமான ஆட்டத்தினால் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் முதல் இன்னிங்ஸில் அவர்களினால் 139 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

அணித் தலைவர் எம். மத்தியூ 34 கே. ராஜ்குமார் 39. பி. சஜீஸ்காந்தன் 16, கே. சதீஸ்குமார் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

போதிய ஓட்டங்களைப் பெறத் தவறியதால் மத்திய கல்லூரி அணி தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆட்ட இறுதி வரைத் துடுப்பாடிய மத்திய கல்லூரி அணி 3 விக்கெட்டுகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது.

பி. முரளிதரன் 28 ஓட்டங்களையும், எம் மத்தியூ, கே சதீஸ்குமார் ஆட்டமிழக்காமல் முறையே 14, 15 ஓட்டங்களைப் பெற்றனர். (உ-7)

## பென்ஷன் பணம்: பாதுகாப்பாக வழங்குவது குறித்து ஆராய மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 9

உயிரைப் பறிகொடுக்காமல் பென்ஷனைப் பெறும் வழிவகைகளைக் காண சம்பந்தப்பட்டவர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டுங்கள்.

இப்படி தமிழர் நலன் புரிச்சங்கம் யாழ் அரச அதிபருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் கேட்டுள்ளது.

தமிழர் நலன்புரிச் சங்கச் செயலாளர் திரு வி. எஸ். இராமநாதர் கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது:-

வாழ்வின் பெரும்பாலான காலத்தை நாட்டுக்கு உழைப்பதில் செலவழித்தவர் இன்றைய பென்ஷனியர்கள்.

இன்று அவர்கள் பென்ஷனை எடுக்க யாழ் கோட்டைக்குச் சென்று உயிரிழக்கின்றார்கள், ஊனமடைகின்றார்கள்.

வங்கிகள், கிராமிய வங்கிகள் மூலமும் பென்ஷன் வழங்கப்படுகிறது. இப்போது வங்கிகளிலும், தபால் நிலையங்களிலும் கொள்ளைகள் இடம்பெறுவதாகத் தகவல் இல்லை. கோட்டைக்கு வெளியில் உள்ள வங்கிக் கிளைகள் அல்லது யாழ் செயலகத்தில் வைத்து பென்ஷன் வழங்கக் கூடியதான திட்டம் ஒன்றை உங்கள் நிர்வாகம் தயாரிக்க வேண்டும்.

இது சம்பந்தமாக ஆராய சம்பந்தப்பட்டவர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டும்படி கேட்டுக் கொள்கிறோம்.


### காணவில்லை

அச்சுவேலி — மூளாய் மினி பஸ்ஸில் இராசவீதிக்கும் குரும்பசிட்டிக்கும் இடையில் கடந்த 23-05-86ல் எனது பொக்கட் டயறியும் க. சின்னத்துரை, புத்தூர், ஆவரங்கால் என விலாசமிடப்பட்டுள்ள இல. 261490110V அடையாள அட்டையும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துக்கு தெரியப்படுத்தவும்.

### விற்பனைக்கு

சங்குவேலி மானிப்பாயில் மின்சார வசதியுடன், சிறிய வீட்டுடன் நாலரைப் பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி; இல; 12, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

கூழாவடி உபதபாற் கந்தோருக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு, ச.ஜெயரட்ணம் கூழாவடி லேன், ஆனைக்கோட்டை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.


கரம்பன் விஸ்வப் பிரம்ம குலத்திலகம்
ஸ்ரீமான் வேலுப்பிள்ளை ஏகாம்பரம்
அவர்களின்

### ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12-6-1916
மறைவு: 21-5-1985

ஓராண்டு சென்றிடினும்
உனது முகம் மறையலையே
நீ வாழ்ந்த பெருவாழ்வு
நெஞ்சை விட்டு நீங்கலையே

என்னருமை ஐயாவே
இதயத்தில் இருக்கின்றாய்
உன்னருமை வாழ்வு தன்னை
உலகத்தார் மறக்கவில்லை.

பேரக் குழந்தைகளும் பேதலித்து நிற்கின்றார்
உற்றார் உறவினரும் உருக்குலைந்து நிற்கின்றார்
ஏகாம்பர ஐயாவே எங்குதான் சென்றீரோ
எமனுக்கு மனம் என்பதில்லையோ ஐயாவே.

என்றாலும் உன்னிதயம்
இங்கிதமாய் சாந்தி பெறும்
என்பதை நினைக்கையில்
எம்மிதயம் இனிக்குதையா
உம்முடைய பாதமதில்
உம்முடைய மக்களின்
உளமுருகும் கண்ணீரை
உன்தனுக்கு அளிக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரக்குழந்தைகள், பூட்டப்பிள்ளைகள்,
நலன் விரும்பிகள்.


## ரெலக்ஸ் ரெலிபோன் சேவை

உலகின் எப்பாகத்திற்கும்

இரவு பகல் 24 மணித்தியால சேவை

விமான ரிக்கட், பாஸ்போட், விசா, போன்ற

Confirmation, Re-Confirmation

யாவும் இங்கே ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

உள்நாட்டு வெளிநாட்டு ரெலக்ஸ் ரெலிபோன் சேவைகளுக்கு உடனடியாகத் தொடர்புகொள்ளவும்;

'நிப்பொன் ரெலி'

2G, STANLEY ROAD, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 16ம் இலக்கத்திலுள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 9-06-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 16 Second Lane, Power House Road, Jaffna.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka unber number Q J 60 N 89